10வது ஆண்டில்

# விளம்பரம்
VLAMBARAM

☎ (416) 282-8059
(416) 282-4978

# உலக தமிழோசை
ULAKA THAMILOSZAI

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 10 JUNE 01, 2000 பாலம் 11

❊ விபத்திற்கு அவசர புத்தி காரணமாகுமா? (பக். 13)
❊ மலச்சிக்கலை நீக்க யோகசிகிச்சை வழியாகுமா? (பக்.4)
❊ கிரகங்களிற்கும், சோதிடத்திற்கும் என்ன தொடர்பு (பக். 11)
❊ நடந்துகொண்டு தொலைக்காட்சி பார்க்க முடியுமா? (பக். 02)
❊ சிறுவர்களிற்கான உதைபந்தாட்டம் (பக். 06)
❊ வாழ்வில் முன்னிற்கு வந்தவர்களின் அனுபவம்...(பக்.15)
❊ கண்ணுக்கு மை இடுவது அழகா? (பக்.05)
❊ மில்லினியத்தில் "WINDOWS 2000 ME" (பக். 8)



RE/MAX Crossroads Realty Inc., REALTOR
Independently Owned and Operated

வீடு வாங்க, விற்க
பூரண ஆலோசனை பெற

Raja M. Mahendran, P. Eng.
Sales Representative

MEMBER OF RE/MAX HALL OF FAME
MEMBER OF RE/MAX PLATINUM CLUB

(416) 491-4002
Pager: (416) 589-4270

இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள்
சபோனாவிற்கு!

SABONA & Gift

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151
2602 B Eglinton Ave. E., Scarborough

## அருள் விருந்து

-செ. சிவசுப்பிரமணியம்

- தனக்கென வாழ்பவன் தாழ்த்தவன் ஆகின்றான். பிறர்க்கென வாழ்பவன் பெருவாழ்வு வாழ்கிறான்.
- இம்மண்ணுலக வாழ்வு கடிதில் கடந்தோடிவிடும். ஈண்டு நாம் பெறும் மதிப்புக்களெல்லாம் வெறும் மதி மயக்கங்களேயாம்.
- ஒவ்வொரு பேரியக்கத்துக்கும் அடிப்படையாக யாராவது ஒருவருடைய தியாகம் இருக்க வேண்டும். தியாகத்தாலன்றித் திண்மையை யாரும் பெறமுடியாது.
- அடிமை புத்தியுள்ளவன் சந்தர்ப்பம் கிடைத்த பொழுதெல்லாம் கொடியோனாக நடந்து கொள்ளுவான். தகுந்த சந்தர்ப்பம் மனிதனது இயல்பை விளக்கும்.
- வில்லை எப்பொழுதுமே நாணேற்றி வைப்பதில்லை. அங்ஙனம் அமைதியுற்று உட்கார அவகாசமில்லாது அலைந்து திரிவது ஆரோக்கயத்தின் அறிகுறியாகாது.

உலக நாடுகள் வரிசையில் தென் அமெரிக்க நாடுகள்

## பீறு (Peru)

தென் அமெரிக்காவில் பசுபிக் சமுத்திர கரையோரமாக ஈகுடோர் (Ecuador) கொலம்பியா (Colombia), பிறேசில் (Brazil), போலிவியா (Bolivia), சில்லி (Chile) ஆகிய நாடுகளை எல்லையாக கொண்ட நாடே "பீறு" (Peru) ஆகும்.

**பரப்பளவு: 4,96,226 ச. மைல்கள்**

**மக்கள் சனத்தொகை: 22,454,000 பேர் (1992ஆம் ஆண்டு மதிப்பீட்டின் படி)**

**தலைநகரம்:** லிமா(Lima) பசுகிக் சமுத்திர கரையாரமாக உள்ளது.

**சுதந்திரம்: யூலை 28, 1821 ஸ்பெயின் நாட்டின் ஆதிக்கத்தில் இருந்து சுதந்திரம் கிடைத்தது**

**மொழி:** ஸ்பனெிஷ், கியூச்சுயா [quechua] & aymara. முதல் இரண்டுமே உத்தியோக மொழி

**சமயம்:** ரோமன் கத்தோலிக்கர்

ஜனாதிபதி இரு உப ஜனாதிபதி, பிரதம மந்திரி, மந்திரி சபை கொண்ட இருபத்து நான்கு

(தொடர்ச்சி 17 ம் பக்கம்)

## உன்னை அறிந்தால்

பல இன்னல்களின் மத்தியில் கனடாவிற்கு வந்து சேர்ந்தவர்களில் இலங்கைத் தமிழர்களும் அடங்குவர். 1983 இற்கு பிற்பாடு அதிகமாக வரத்தொடங்கியவர் ஏறக்குறைய 200,,000ஐ தாண்டிவிட்டதாக, கனடாவில் வெளிவரும் பத்திரிகை தெரிவிக்கின்றது. 17 வருடங்களில் பலதமிழர்கள் தங்களிற்கான ஒரு இடத்தை தொழில்புரியும் இடங்கள், கல்வி கற்கும் பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள் போன்றவற்றில் தெரியப்படுத்துவதில் தமிழரிற்கு பெருமை. இந்நிலை தொடரவேண்டும், தொடர்கின்றது. தொழில், கல்வி, தனியான தொழில் போன்றவற்றில் பெருமைப்படுத்துபவர்கள், விளையாட்டு போன்ற மற்றைய துறைகளிலும் திறமையை மேலும் தெரியப்படுத்த வேண்டும். இன்றே இடும் வித்தே 10 வருடங்களிலும் மரமாக தளிர்விடும். காலத்தை அறிந்து தேவைகளை அறிந்து, அதற்கேற்ப மூலதனம் இடுவதே சிறந்த வ்ழியாகும். அண்மையில் Spelling Bee of Canada நடாத்திய ஆங்கிலச் சொற்களை ஞாபகப்படுத்தி ஒப்புவிக்கும் தேர்வில் 83%இற்கு மேலதிகமானவர் தமிழ்ச் சிறுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நிகழ்காலத்தில் இவர்கள் சாதிப்பது எதிர்காலத்தில் கனேடிய மண்ணில் தமிழரிற்கு ஒரு சிறப்பிடம் உண்டு என்பதற்கு ஒரு எதிர்கூறு. **நல்லதைச் சிந்திப்போம்..நல்லதே நடக்கும்.**

**நாளை நமதே. வெற்றி நமதே!!** -நெற்றிக்கண்ணன்

விளம்பர வினாடி வினா! CTBC RADIO ✡ SATUARYDAY ✡ 12.15 PM



SINGAPORE CELLUAR

$25.00 + Taxes 200min/Month

PAGER $5.95/Month Unlimited


$55.00 +Taxes / Month
7 a.m. - 7 p.m. 400min. இலவசம்
7 p.m. - 7 a.m. கிழமை நாள் இலவசம்
Fri. 7 p.m. - Mon. 7 a.m. இலவசம்
மேலதிக நிமிடம் 20 சதம் மட்டுமே

CANTEL
Bell Mobility

Mobile Message, Call Waiting, Call Display per second billing included.
மேலதிக விபரத்திற்கு சக்தி: (416) 745-2378

HOTLINE: (416) 980-1234

துரித பணமாற்றுச் சேவை



வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221



சிவாகம கிரியா பீடம்

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr., Scarborough, Ont.

VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
SCARBOROUGH, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978



# அறிவும் ஆக்கமும் (58)

-விஜே குலத்துங்க்ம்

தொடர்பு சாதனங்களில் மிகவும் பிரபல்யமானது தொலைக்காட்சி (Television) ஆகும். அருகிலே இருந்து பார்ப்பதற்கு இயலாத பல விடயங்களை தொலைக் காட்சிப் பெட்டியினால் வீட்டிற்குள்ளேயே கொண்டு வந்து விடலாம். ஒரு நாட்டின் தலைவரைக் கூட அருகே இருந்து பார்க்கலாம். சந்திரனில் மனிதர் கால் வைத்தது, புத்தாயிரக் கொண்டாட்டங்கள் போன்ற சரித்திர முக்கியத்துவம் நிறைந்த காட்சிகளைக் கூட வீட்டிலே இருந்து பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

1873ஆம் ஆண்டு ஸ்கொட்டிஸ் விஞ்ஞானியான James Clerk Maxwell தொலைக்காட்சியில் ஒளி பரப்பக்கூடிய மின்காந்த அலைகள் இருப்பதைக் கண்டுபிடித்தார். அதே ஆண்டு ஆங்கிலேயராகிய Willowby Smith ம் அவருடைய உதவியாளர் Joseph Mary உம் Photo conductivity என்னும் ஒளிக் கடத்து திறனைக் கண்டுபிடித்தார். இந்தத் தத்துவம் தான் தொலைக் காட்சிப் பெட்டியிலுள்ள Picture Tubeஇல் உபயோகிக்கப்படுகின்றது. முதலாவது வீட்டுப் பாவனைக்குரிய தொலைக்காட்சிப் பெட்டி 1928ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் திகதி நியூயோர்க்கில் செயற்படுத்திக் காண்பிக்கப்பட்டது. இந்தப் பெட்டி 3 அங்குல திரையைக் கொண்டதாக இருந்தது. 1928ஆம் ஆண்டு மே மாதம் 10ஆந் திகதி நியூயோர்க்கின் WGY தொலைக்காட்சி நிலையம் முதலாவது ஒளிபரப்பைச் செய்தது. பொதுச் சனங்களுக்கான முதலாவது ஒளிபரப்பு லண்டன் மாநகரத்தில் 1936ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. ஆனால் இரண்டு வருடங்களில் உலக மகாயுத்தம் காரணமாக இது நிறுத்தி வைக்கப்பட்டு 1946ஆம் ஆண்டு மீண்டும் ஒளிபரப்பு ஆரம்பிக்கப்பட்டது. 1954ஆம் ஆண்டு வண்ணத் தொலைக்காட்சி Colour TV ஆரம்பிக்கப்பட்டது.

தொலைக்காட்சிப் பெட்டியின் உள்ளே Picture Tube எனப்படும் மிகப்பெரிய மின் குமிழ் போன்ற ஒரு அமைப்பு காணப்படுகின்றது. இந்த Picture Tube வீடியோ சமிஞ்சைகளை அதன் பின்புறத்தின் மத்தியில் இருக்கும் ஒரு Picture Gun மூலம் ஒரு இலத்திரன் கற்றையை முன்புறமாகவுள்ள திரையில் விழுத்தும். திரையின் அளவு பெரிதாகிச் செல்ல, Picture Gun திரையிலிருந்து தூரத்தில் இருக்க வேண்டும். இதனாலேயே தொலைக்காட்சிப் பெட்டியின் திரையின் அளவு பெரியதாக இருக்கும் போது பின்புறமாக அதன் நீளமும் அதிகரித்துக் காணப்படும். கறுப்பு வெள்ளைத் தொலைக்காட்சிப் பெட்டியில் ஒரேயொரு Gun மாத்திரம் இருக்கும். ஆனால் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியில் அடிப்படை நிறங்களான சிவப்பு, பச்சை, நீலம் ஆகிய நிறங்களுக்காக மூன்று Gun கள் காணப்படும்.

தற்போது பிரபல்யமாகி வருவது சுவர் TV அல்லது Wall Tv எனப்படும் LCD தொலைக்காட்சிப் பெட்டிகளாகும். LCD என்பது Liquid Crystal Display எனப்படும். இதன் திரையில் மின்சாரத்தினால் தாக்கமுறும் ஒரு திரவம் காணப்படும். மின்சாரம் இந்தத் திரவத்தினூடாக பாயும் போது ஒரு கலக்கல் நிலையை அடைந்து ஒளிபுகவிடாது தடுக்கும். இந்தத் திரையில் மில்லியன் கணக்கான மிக நுண்ணிய பெட்டிபோன்ற வடிவங்கள் திரவத்தைக் கொண்டிருக்கும். இந்த நுண்ணிய பெட்.களினூடாக படங்களுக்கேற்ப மின்சாரம் பாயும் போது விம்பங்கள் திரையில் தோன்றுகின்றன. முள்ளில்லாத இலக்கங்களைக் காட்டும கைக்கடிகாரங்களிலும் இந்த LCD அமைப்பே காணப்படும். இந்த LCD தொலைக்காட்சிப் பெட்டிக்கு picture tube தேவையில்லையாதலால் இது தட்டையாகவிருக்கும். எனவே சுவரில் தொங்கவிடக் கூடியதாகவிருக்கும். இவை சாதாரண தொலைக்காட்சிப் பெட்டியை விட 1/5 பங்கு குறைவான மின்சாரத்தையே எடுக்கும். அத்துடன் கதிர்வீச்சு அற்றதாகவுமிருக்கும்.

தற்போது கொம்பியூட்டர் மொனிட்டர்களும் இந்த தட்டை வடிவத்தில் வந்துள்ளன. LCD தொழில் நுட்பத்தை விட Glass plasma Display என்ற தொழில்நுட்பமுடைய தொலைக்காட்சிப் பெட்டிகளும் தயாரிக்கப்படுகின்றன. கடைகளில் பெரிய அளவில் 50-60 அங்குல அளவில் காணப்படும் TVக்கள் Projection TV எனப்படும். இதில் வழமையான Picture Tube கிடையாது. பின்பக்கத்திலிருந்து சாதாரண Projector போன்ற ஒளிக்கற்றைகளை அனுப்ப விம்பம் திரையில் விழும். ஆனால் சாதாரண TV போன்ற தெளிவான படங்கள் தெரியமாட்டாது.


மிகவும் செறிவு கூடிய துல்லியமான விம்பங்களை உருவாக்கக்கூடிய HDTV எனப்படும் High Definition தொலைக்காட்சிப் பெட்டிகளும் உருவாக்கப்பட்டள்ளன. இது 1980 களில் முதன் முதலில் உருவாக்கப்பட்டது. இது அகலத்திரை wide screen உடையதாக இருக்கும். சாதாரண TV இல் 525 தொடக்கம் 625 லைன்களே (Lines) காணப்படும். ஆனால் HDTV இல் 1125 லைன்கள் இருப்பதால் படம் தெளிவாக இருக்கும்.

தொலைக்காட்சிப் பெட்டிகளுடன் சம்பந்தப்பட்ட இன்னுமொரு அமைப்புத்தான் VIA TV எனப்படும் அமைப்பு. இதில் நீங்கள் தொலைபேசியில் கதைக்கும் போது, எதிர்முனையில் பேசுபவரைப் பார்க்க முடியும். ஏற்கனவே வீட்டில் கொம்பியூட்டரில் வீடியோ கமெரா இணைப்பும், netmeeting போன்ற software களை வைத்திருப்பவர்கள், computer மூலம் முகங்களைப் பார்த்து பேசக்கூடியதாக உள்ளது. இதேபோன்ற அமைப்புத்தான் VIA TV இல் உள்ளது. ஆனால் Computer தேவையில்லை. VIA TV அமைப்பில் ஒரு மூன்று அங்குல LCD TVயும், 33K மோடமும் இருக்கும். இப்படியான VIA TV க்கள் 450 டொலர் வரையில் விற்கப்படுகின்றது. இதன் இன்னுமொரு அமைப்பில் LCD Screen இல்லாது, சாதாரண தொலைக்காட்சியுடன் இணைத்து அதில் உருவத்தைப் பார்க்கும் அமைப்பு 275 டொலர்கள் வரையில் விற்கப்படுகின்றது. இந்த VIA TV க்களைப் பாவிக்கும்போது இருபுறத்திலும் பேசுபவர்களிடமும் இந்த அமைப்புகள் இருக்கவேண்டும். எனவே பரவலான பாவனைக்கு வர சிறிது காலம் பிடிக்கலாம்.


11 வருடங்களாக தமிழர் மத்தியில்

**யோகாஸ்**

☎: (416) 267-0408



## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 108

**இடமிருந்து - வலம்**

1. புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட வான்கலம்
4. நிற்பாட்டு
5. வீட்டிற்கு கூரைபோட உபயோகிக்கப்படுவது
6. நான்கு யுகங்களில் தற்போது நடப்பது
9. வரவேற்பு மேசையில் இருக்கும் மங்[கல] சின்னம் ஒன்று
10. குழந்தை (வல-இட)
11. நிறைவேற்று (வல-இட)

**மேலிருந்து கீழ்**

1. சூரியன் வடக்கு நோக்கி நகர்வதாக தோன்றும் காலம்
2. வாசனை புகைபோட உபயோகிக்கப்படுவதும் ஒரு மரத்தின் பிசின்
3. களவு எடு
5. ஒத்துக்கொள்
7. ஒரு எண்ணின் மூன்று அடுக்குகள்
8. துப்பல்
12. மனிதனின் பரந்த பின்புறம் (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் JUNE 27, 2000க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இ | ய | க் | க | ச் | சி | | ம் |
| தி | | | ண் | | ந் | | ட |
| கா | | | டி | | தூ | க் | கு |
| ச | ஞ் | சி | கை | | ர | | ம |
| ம் | | த் | | அ | ம் | பு | |
| | ஆ | தி | | னு | | ப் | |
| ஈ | | ர | | ப | | று | ஈ |
| கை | | ம் | ட | வி | ற்ற | உ | |

**#107இல் வெற்றி பெற்றோர்**

1)W. Tarmalingam. Toronto. Ont.
2.கம்சவேணி மணிமாறன். North York. Ont.

*இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள் உடன் ஆட்டிறைச்சி, கோழி, மாடு, மீன், கணவாய் மற்றும் சகல விதமான உணவுப் பொருட்களுக்கும் நாடுங்கள்*



***உங்கள் குழந்தையின் எதிர்கால கல்வியில் ஒரு சிறு தொகையை முதலிடுவதுடன்***



கனேடிய அரசின் கல்விக்கான மானியம் $400 இலவசம்!

☆ TWO YEAR DIPLOMA program ஐ வெற்றிகரமாக முடிப்பதன் மூலம் சகல புலமைப் பரிசில்களையும் பெற முடியும்.



- *அரச அங்கீகாரம் பெற்ற புலமைப் பரிசில் சேமிப்பு திட்டம்.**(R.E.S.P)***
- *உலகின் எங்தப் பாகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி பெறலாம்.*
- ***இன்னும் பல சலுகைகள் உண்டு.***

இலவச ஆலோசனைகள் பெற எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு - **சீலன் .A** (Siva)

***The Children Education Trust of Canada***

*Tel: (416) 451- 0271 pager: (416) 980-9836*


பெரிய நிறுவனங்களின் Board Meeting போன்றவற்றில் அங்கத்தவர்கள் வெவ்வே[று] இடங்களில் இருந்து இப்படியான தொலைக்காட்சியில் ஆளை ஆள் பார்க்[க] கதைத்துக் கொள்கின்றார். இது Video Conferencing எனப்படும்.

ஆரம்பகாலத்தில் அனுப்பப்பட்ட TV அலைகள் Analog எனப்படும். தொடர்ச்சியா[க] வரும் மின்னியல் தொலைக்காட்சி சமிஞ்சைகளால்தான் பெறப்பட்டன. தற்போ[து] Shaw Cable, Rogers Cable ஆகியன Digital சமிஞ்சைகளை அனுப்புகின்றன. இவற்றை நாம் பெறுவதற்கு digital decorder பெட்டியொன்றை cable நிறுவனத்திட[ம்] இருந்து வாடகைக்கு பெற்று உபயோகிக்க வேண்டும். Digital Signal மூலம் வரு[ம்] படம் கூடிய தெளிவாகவும், ஒலி CD தரமுள்ள ஒலியாகவுமிருக்கும். இதன் முழுப்பயனையும் பெற தொலைக் காட்சிப் பெட்டியும் Digital TV யா[க] இருக்கவேண்டும். ஆனால் இவை விலையுயர்ந்தன. ஆரம்பத்தில் இந்த Digita[l] TV, HDTV, LCD போன்ற தொலைக்காட்சிப் பெட்டிகள் விலை கூடியவையா[க] இருந்தாலும் காலம் செல்ல இவற்றின் விலை குறையும்.

********************************************************

*"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 61 SCARFAIR PATHWAY, SCARBOROUGH, ONT. M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு E-Mail ஐ எழுதி அனுப்பவும்.*

# APPLEMORE AUTOMOTIVE


உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing




- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility




**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple


# நினைவில் நிலைத்து நிற்கவேண்டியவை

(01) உலகின் மிகப்பெரிய பயணிகள் கப்பலின் பெயர் என்ன?

**கிராண்ட் பிரின்ஸ் (Grand Prince) இது பரபரப்பாகப் பேசப்படும் டைட்டானிக் கப்பலைவிட இரண்டு மடங்கு பெரிய கப்பலாகும்.**

(02) உலகில் பரசூட் வீரர்கள், வீராங்கனைகள் மிக அதிகமாக இருப்பது எந்த நாட்டில்?

**ரஷ்யாவில் இதற்கு அடுத்த இடத்தில் இருப்பது அமெரிக்கா.**

(03) ஐரோப்பாவின் நோயாளி என்றழைக்கப்படும் நாடு எது?

**துருக்கி**

(04) தண்ணீர் மூலம் வைத்தியம் செய்யும் கலைக்கு என்ன பெயர்?

**ஹைட்ரோபதி என்று பெயர்.**

(05) விலங்கினங்களிலேயே அதிவேகமாக ஓடக்கூடிய மிருகம் எது?

**சிறுத்தைபுலி.. இது ஒரு மணிக்கு 3 கிலோ மீட்டர் ஓடக்கூடிய ஆற்றல் கொண்டது.**

(06) சுவீடன் நாட்டு பாராளுமன்றத்தின் பெயர் என்ன?

**ரிக்ஸ்டாக்**

தொகுப்பு: seelan Aiyadurai (siva) ,


## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")

* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING



*>Railing >Fencing >Welding*

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5

## J DAYCARE



- 7 மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்கு சிறந்த பராமரிப்பு
- ECE தகுதி பெற்ற நடத்துனர்
- TAX RECEIPT வழங்கப்படும்
- காலை 7:00 மணி - மாலை 6:00மணிவரை
- மாலை 6:00 மணி - மாலை 10:00 மணிவரை

1 Hr. - $3.00
Day - $15.00
Week - $60.00

தினசரி நடவடிக்கைகள்-: உள்ளக, வெளியக விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா

தொடர்புகளுக்கு: Mrs. S.J. சௌந்தரநாயகம் **(416) 502-3033**

*(Finch/Birchmount) 151 Lamareaux Dr., TownHouse 99A, Scarboro, Ont. M1W 2J9*

## நியூ மிலேனியத்தில் ஸ்காபரோவில் 9 வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

**Also Air Conditioning Service & Repair**


## NTE AUTO INC.
New Trade Engineering

## என். ரி. இ. ஓட்டோ இங்க்

Contact: Sivabalan சிவபாலன்

**Tel: (416) 750 - 1573**

151 NANTUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT.



In New Millennium We are entering 9th year service in Scarborough


## கலந்துரையாடல்

தமிழின் சிறந்த கவிதைகளை படைத்தவரான

**மகாகவி** உருத்திரமுர்த்தி

யின் நினைவுகளும் படைப்புகளும்

இடம்: Mid Scarborough Community CTR.
(Kennedy & Eglinton, Beside Kennedy Subway)

காலம்: June 03, 2000 - Saturday 4:30pm

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**இலக்கிய அகவி வட்டம்**

தொடர்புகட்கு: (416) 609-8113 (416) 674-0397



# ஆரோக்கிய வாழ்வு (60)

- *N.* செல்வசோதி

### மலச்சிக்கல் - யோகசிகிச்சை

மலம் குடலைக் கடக்கவும் குடலை விட்டுக் கழியவும் தாமதப்படும் போது "மலச் சிக்கல்" நிலை உருவாகின்றது. இந்த நிலை, மலமானது முற்றிலும் கழியாது சிறிது சிறிதாகத் தேங்கித் திரளுவதாலும் ஏற்படலாம். இந்த நோய் பெருங்குடலையும் மலம் போக்கும் குழாயையும் சம்மந்தப்பட்டதாகும்.

### மலச்சிக்கலின் வகைகள்

மலச்சிக்கலை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். உடல் கருவிகளால் உண்டாவது. மலம் போக்கும் தொழில் கெடுவதால் உண்டாவது குடலுக்குள் ஏதாவது வளர்ந்து பெரிதாகி அல்லது மலமே திரண்டு கல்லாகி நகர வழியின்றி குடலை அடைத்து விடுதல் கருவிகளால் உண்டாதல் (Organic)

அடுத்து மலம் போக்கும் தொழில் கெடுவதால் உண்டாவதே சாதாரணமாக எங்கும் காணப்படுகிறது (Functional)

### மலச்சிக்கல் ஏற்படக் காரணங்கள்

1. மலம் கழிக்கும் உணர்வு உண்டான வேளைகளில் கழிக்க முடியாத நிலமை
2. கவலை, மனப்பிரமை
3. தவறான உணவுப் பழக்கங்கள்
4. போதுமான அளவு நீர் அருந்தாமை
5. உடலுக்கு உழைப்பு இல்லாமை - நடை, ஓட்டம், வளைதல், நிமிர்தல்
6. உண்டதும் தூங்குதல், தூக்கமின்மை
7. பற்பல மருந்து மாத்திரை வகைகளை அளவுக்கு மீறி உபயோகித்தல்

### மலச்சிக்கலால் உடலில் ஏற்படும் மாறுதல்

1. மலம் கட்டியாகி மலம் போக்கைத் தடுத்தல்
2. பெருங்குடல் சதையில் விரியும் தன்மை குறைந்து போதல்
3. மலம் சேர்ந்து நிறை அதிகரிக்க பெருங்குடல் பாரம் அதிகரித்து கீழ் இறங்குகிறது
4. வயிற்றில் இறுக்கம் குறைந்துபோதல். அத்துடன் நரம்பு சக்கரங்கள் சக்தி குறைந்து போதல்

### யோக சிகிச்சை முறைகள் - ஆசனங்கள்

| ஆசனங்கள் | முறை | நிறுத்தும் காலம் |
|---|---|---|
| 1. சர்வாங்காசனம் | 3 | 1 நிமிடம் முதல் 2 நிமிடம் |
| 2. தனூராசனம் | 5 | 30 வினாடி " 2 நிமிடம் |
| 3. ஹாலாசனம் | 3 | 10 " " 30 வினாடி |
| 4. புஜங்காசனம் | 2 | 10 " " 30 " |
| 5. சலபாசனம் | 3 | 5 " " 30 " |
| 6. உட்டியானா | 5 | 10 " " 30 " |
| 7. பட்சிமொதாசனம் | 3 | 5 " " 30 " |

### இதர பயிற்சிகளும் உணவு முறைகளும்



1. ஒரு குறிப்பிட்ட நேரமாவது உடல் உழைப்பால் செய்யும் வேலை முக்கியமானது
2. உணவு அருந்தியபின் இரண்டு மணிநேரமாவது கழித்து படுக்கைக்கு போதல் நன்று.
3. காப்பி, டீ குடிப்பதை குப்பதை குறைத்து வரவேண்டும்
4. பழவகைகளை மட்டும் உட்கொள்ளுதல் மிகவும் சிறந்த பலனைக் கொடுக்கும்.


**யோகாசன வகுப்பு**

யோகாசனப் பயிற்சிகள் மூலம் உங்கள் உடல் நலத்தைப் பேணுங்கள். யோகாசனப் பயிற்சி வகுப்புக்கு தொடர்புகொள்ள

இடம்: Woburn Collegiat e (Markham /Ellesmere)

நேரம்: 7:30 am - 8:30am தொடர்புகளிற்கு: - சத்தி: 291-5853

**TAMIL INSURANCE CLAIMS CONSULTANT** தமிழில் இலவச ஆலோசனை

வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?

*தகுந்த ஆலோசனை *சட்ட உரிமை *உரிய நஷ்ட ஈடு

*விபத்துக்குள்ளாலியவர் சம்பள இழப்பீடு

*மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும் அறிவுரைகளும் தமிழிலும்

ஆங்கிலத்திலும் சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள 12 வருடகால அனுபவமுள்ளவர்

**ரவி நடராஜா**

TEl:(416) 245-6555 Fax: (416) 245 7766

2095 Weston Rd. #201 (South of HWY 401) Toronto Ont. M9N 1X7

**Neelam SILK**

**நீலம் சில்க்**

*2000ஆம் ஆண்டின் புதிய புடவைத் தெரிவுகளை நம்மவர்களுக்கு அறியத்தருகிறார்கள் 'நீலம் சில்க்'*

உயர்ரகப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்

- முகூர்த்தப்பட்டுப் புடவைகள்
- பாரம்பரிய பட்டுப் புடவைகள்
- Thread Work பட்டுப்புடவைகள்
- ரிசு சேலைகள்
- காஞ்சி 2000 ரிசு சேலைகள்
- Emboss Tissue சேலைகள்,
- Cut Work சேலைகள்
- அபூர்வா 2000 Cut Work



புதிய வெளியீடுகள்

மைசூர் சில்க் சேலைகள், சோனா மீனா (Sona Meena) புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள்

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

'நீலம் சில்க்'

1453 GERRARD STREET EAST (Indian Bazzar)

CALL: (416) 778- 7455 FAX: (416) 778-8484



# ஒரு சாதாரண மனிதரின் சிந்தனையில்...



**அழகு** (கண்ணுக்கு மை....)

உருவத்தில் அழகாக இருப்பதை விட உள்ளத்தில் அழகாக இருப்பதே மனித வாழ்க்கையை மகிழ்ச்சிகரமாக்கும் மருந்தாகும். நல்லதையே நினைத்து நல்லவற்றையே செய்து வந்தால் நல்லவையே இந்த உலகில் நடக்கும். ஆனால் அது சாத்தியமற்றது என்பது யாவரும் அறிந்ததே. தீயவை இந்த உலகில் நடக்கா விட்டால் நன்மையின் முக்கியத்துவம் தெரியாமல் போய் இருக்கும். பலருக்கு வேலையும் இல்லாமல் இருந்து இருக்கும்.



உள்ளத்தில் உள்ள அழகை விட கண்களால் பார்க்கக் கூடிய உருவ அழகே முதலில் மக்களால் கவரப்படுகின்றது. மனித வாழ்க்கைக்கு இன்றியமையாததாக விளங்கும் அன்பும், காதலும் மலர்வதற்கு முதலில் உருவ அழகே அடி எடுத்து கொடுக்கின்றது. வாழ்க்கையில் ஒரு தடவை தன்னும் சந்தித்திருக்காத போதிலும் அழகான ஒருவரிடம் இலகுவாக யாரும் கவரப்பட்டு விடுகின்றார்கள். பின்பு அவருடன் பழக பழக நாளடைவில் உருவத்தில் அழகாக இருப்பவரின் உள்ளத்தின் அழகு தெரிய வருகின்றது.

அழகு தெய்வீகமானது. சிலுவையில் அறையப்பட்டு இருக்கும் யேசுவின் முகத்தில் தெரிவதும் மேரி மாதா மற்றும் இந்து சமயம் பெண் தெய்வங்களின் முகங்களைப் பார்க்கும் போதும் அவர்கள் முகங்களில் தெரியும் அந்த அழகு ஒரு தெய்வீக உணர்வை மனங்களுக்கு கொடுக்கின்றது. இந்து சமயம் இந்த உலகில் முதல் தோன்றிய பழைமையான மதமாக இருந்த போதும் அன்று முதல் இன்று வரை இந்து மத பெண் தெய்வங்களாகிய அம்மன், லஷ்சுமி, சரஸ்வதி போன்றவர்களை நேரிலே கண்டவர்கள் யாரும் கிடையாது. அப்படி இருக்கும் போது பெண் தெய்வங்களை சொல்லி வைத்த மாதிரி அழகாக வரைவதற்கு நன்றாக அலங்கரித்த பெண்களில் காணப்பட்ட தெய்வீகமான அழகே ஆதாரமாக இருந்து இருக்க வேண்டும். சாதாரணமான தோற்றமுடைய ஒரு பெண் கூட நன்றாக இருக்க வேண்டும். சாதாரண தோற்றமுடைய ஒரு பெண் கூட நன்றாக அலங்கரிக்கும் போது மிகவும் அழகான தோற்றத்தைப் பெற்று விடுகின்றாள்.

அழகிய சேலையை உடுத்தி, முகத்திற்கு வர்ணம் பூசி அலங்கரித்த போது வருகின்ற அழகு ஒரு பொட்டு நெற்றியில் இடப்பட்டதும் மேலும் கூடுதலாகி விடுகின்றது. நெற்றியில் இடப்படுகின்ற பொட்டு ஒரு பெண்ணிற்கு மிகுந்த [illegible]கை கொடுக்கின்றது. உலகின் பிரபலமான பாடகிகளான Madona Shanaia Twar போன்றவர்கள் கூட தமது பிரபலமான பாடல்களின் Video பதிவின் போது நெற்றிக்கு பொட்டு வைத்து தமது அழகை அதிகரித்து ஆசையை பூர்த்தி செய்து கொள்கிறார்கள். அவர்கள் பொட்டு வைத்துக் கொள்வதால் அவர்கள் இந்து சமயத்தை சார்ந்து விட்டார்கள் என்பது அர்த்தமல்ல.

எமது தமிழ் கலாசாரத்தின் படி பெண் ஒருவர் பொட்டு வைக்காமல் சேலை உடுத்தியவாரக காணப்பட்டால் உடனடியாக எமது மனதிற்கு தோன்றுவதெல்லாம் கணவரை இழந்து விட்டோமோ என்ற பச்சாதாப உணர்வே ஆகும். ஏனெனில் அவரது முகத்தில் இருந்த அழகு போய் விட்டதே காரணம் ஆகும். இந்த உணர்வு அண்மையில் எனக்கு ஒரு தமிழ் திருமணம் நடைபெற்ற இடத்தில் வந்தது. ஒரு பெண் அழகாக பட்டுப் புடவை உடுத்தி நகைகள் எல்லாம் அணிந்து இருந்தார். இரண்டு சிறிய பிள்ளைகளுடன் ஒரு பக்கத்தில் அமர்தது இருந்தார். அவரது முகத்தை பார்த்ததும் அவரது தோற்றத்திற்கும் முகத்திற்கும் சம்மந்தம் இல்லாமல் இருப்பது போல் தோன்றியது. காரணம் அவரது முகத்தில் பொட்டு இருக்கவில்லை. உடனே மனதில், அவர் கணவரை இழந்துவிட்டார் என்ற உணர்வே மனதை தாக்கியது. ஆனால் என்ன ஆச்சரியம்! சிறிது நேரத்தில் அவரது பிள்ளைகள் ஓடிச் சென்று அப்பா என்று தந்தையை கையைப் பிடித்து விளையாடிக் கொண்டு நின்றதைக் கண்டதும் மனம் சாந்தமாகியது. அருகில் நின்ற நண்பர் ஒருவரிடம் விசாரித்ததில் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அண்மையில் இந்து சமயத்தை கைவிட்டு வேறு மதத்திற்கு மாறி விட்டார்கள். அதனால் தான் அப்படி தோற்றமளிக்கின்றனர் என்று சொன்னதும் என் எண்ணத்தில் தோன்றிய கேள்வி மதம் மாறுவதற்கும் பொட்டு வைப்பதன் காரணத்தை முழுமையாக தெரிந்து கொள்ளாமல் மதத்துடன் சம்மந்தப்படுத்தி அழித்து விட்டார்கள் என்பதற்காக 21ஆம் நூற்றாண்டிலும் சரிவர சிந்திக்காமல் மதம் மாறுபவர்கள் மீது பரிதாபம் தான் உண்டாகின்றது. எல்லோரும் ஒன்றை தெரிந்து கொள்ள வேண்டும். பொட்டு வைப்பது என்பது இந்த மதத்திற்கு மட்டும் தான் சொந்த விடயம் என்று இல்லை என்பதே பொட்டு வைப்பதும் விடுவதும் [illegible]ரவர் சொந்த விருப்பம். ஆனால் மதத்துடன் சம்மந்தப்படுத்தாதீர்கள்.

*சிந்தனை தொடரும்....* *பரம் G. ஒரு சாதாரண மனிதன்*


**MARRIAGE BROKER**




நல்ல ஜாதகங்கள் கையிருப்பில் இருக்கிறது. செவ்வாய் தோசமுள்ள ஜாதகங்களும் உண்டு. மேலதிக தொடர்புளுக்கு: :416 438-3281

*Aruna Food*

EAST WEST INDIAN AND CANADIAN GROCERIES
* துரித பணமாற்றுச் சேவை
* VIDEO CONVERT SYSTEM
*நாங்கள் எந்த மலிவு விலையையும் சமன் செய்வோம்.*
அருணா பூட்
3585 Keele Street, Unit 11
North York, Ont. M3J 3H5
Tel: 416- 638-9554
Fax: 416- 638-9584

**REAGAN RENOVATION**




*Basement திருத்த வேலைகள்,*
*Tiles பதிப்பதற்கு*
*Interlocking,*
*வீட்டிற்குரிய திருத்த வேலைளிற்கு*



அழையுங்கள் (416) 286-5026

பூச்சிகளை அழிக்கவே முடியாதா?
**CITY PEST CONTROL**

* எலிகள் * கரப்பான் பூச்சிகள்
* மூட்டைப்பூச்சிகள் * எறும்புகள்



போன்றவற்றை முற்றாக அழித்து நிவாரணம் பெற இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.



* 100% முற்றாக அழிக்க முடியும் என்று எழுத்து மூலம் தரப்படும்
*ஒருதடவை அணுகுங்கள் உண்மை புரியும்*

* WE ARE QUALIFIED, PROFESSIONAL, INSURED AND BONDED.

* NO NEED TO LEAVE TO HOME OR REMOVE DISHES DURING TREATMENT.



**(416) 410-2786**
*7 நாட்களும் அழைக்கலாம*

**கலைமகள் புத்தக நிலையம்**

- *சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்*
- *தமிழ்ப் புத்தகங்கள்*
- *கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்*
- *இலங்கை/இந்திய பத்திரிகைகள்*
- *குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்*
- *CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்*
- *கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல*

துரித பணமாற்றுச் சேவை

594 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 921-5018

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605

3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH, ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494

**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**

Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12
Professional Photographer - கதிர்



☎: (416) 750-8118
*2381 EGLINTON AV. E.*
*KENNEDY/ EGLINTON, SCARBOROUGH*

# விளையாட்டுத் தகவல்கள் (54)

-எஸ். கணேஷ்




## மில்லேனியம் Cups -2000

### உதைபந்தாட்டாம்

**Jarvis Sports Club - 1st மில்லேனியம் Cup**

ரொறன்ரோவில் எமது தமிழ் உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு மிகவும ரசிக்கக்கூடிய ஒரு பொழுது போக்கான விளையாட்டு என்றால் உதைபந்தாட்டமே முன்னணியில் உள்ளது. கடந்த சில வருடங்களாக உதைபந்தாட்ட ஆட்டங்கள் எவ்வித பிரச்சினைகளும் இன்றி ரொறன்ரோ நகரில் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. முக்கியமாக இதன் காரணகர்த்தாக்களாக கனேடிய தமிழர் உதைபந்தாட்டச் சங்க அமைப்பு குழு நிர்வாகிகளே என்றால் மிகையாகது. இச்சங்கத்தின் (CTSA) நிர்வாக உறுப்பினர்களாகிய திரு. சில்வஸ்ரர், திரு. ஆசைதாசன், திரு. A. கணேஷ், திரு. சிவராஜா ஆகியோரின் நிர்வாகத் திறமையால் தற்போது ஆட்டங்கள் யாவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

கனேடிய தமிழர் உதைபந்தாட்ட சங்கம் நடாத்திய மில்லேனியம் Cup-2000 முதலாவது சுற்றுப்போட்டியில் யாவீஸ் விளையாட்டு கழகம் முதலாவது மில்லேனியம் Cupஐ வெற்றி கொண்டது. இதில் மேலும், சிறப்பம்சம் என்ன வெனில் யாவீஸ் A விளையாட்டுக் கழகமும், யாவீஸ் B விளையாட்டுக கழகமும் இறுதிப் போட்டிக்கு தெரிவாகின. 19 விளையாட்டுக கழகங்கள் பங்கு பற்றிய இவ் விளையாட்டுப் போட்டிகள் யாவும் சிறப்பாக நடந்தன.



CTSA இன அனுசரணையுடன் நடைபெறும் இப்போட்டிகள ஒவ்வொரு சனிக் கிழமையும நடைபெறும். இதில் குறிப்பாக June 17ஆம் திகதி உலகத் தமிழர் மாணவர் அமைப்பினால் 11பேர் கொண்ட சுற்றுப்போட்டி வெகு விமரிசையாக நடாத்தப்பட இருக்கின்றது. மற்றும் யாழ். பாடசாலைகள் சங்கத்தினால் (JSSA) August 12ஆம் திகதி 9பேர் கொண்ட சுற்றுப்போட்டிகளும் நடைபெற இருக்கின்றன. அத்துடன் இவ உதைபந்தாட்ட சங்கத்தினால் (CTSA) தமிழ் ஈழத்தில் அல்லல்படுட மக்களுக்காக தமிழர் மருத்துவ நிதியத்திற்காக ஒரு பெரும் சுற்றுப்போட்டியும் இவ்வருடம் நடைபெற இருக்கின்றது.

இவ்வருடம் தமிழர் அணியான Cadadian Tamils அணி Toronto & District League இல 2 வது பிரிவிற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளது. சென்ற வருடம் இவ் அணியின வெற்றிகள் யாவரும் அறிந்ததே. இவ்வருடம் Canadian Tamils அணியை CTSA சங்கம் பொறுப்பேற்று நடாத்துகின்றது. பல்வேறு இன அணிகளுடன் எமது தமிழர் அணி மோத இருக்கின்றது. யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

**ஆட்டங்களின் விபரம் பின்வருமாறு**

| | | | |
|---|---|---|---|
| June 04 | Sunday 3:00pm | Rosslord Park | CAD Tamils Vs Sateba Units |
| June 09 | Friday 7:00pm | Rosslord Park | Veneto lions Vs CDN Tamils |
| June 11 | Sunday 2:00pm | Norval Centre | CDN Tamils Vs Norval Croatia |
| June 23 | Friday 7:00pm | L'amoreaux Park | NK Pythons Vs CDN Tamils. |
| July 6 | Thursday 9:00pm | Veneto centre | Real Toronto Vs CDN Tamils |
| July 9 | Sunday 9:00pm | L'amoreaux Park | Barbados Vs CDN Tamils |
| July 14 | Friday 9:00pm | L'amoreaux Park | Barbodos Vs CDN Tamils |
| July 21 | Friday 9:00pm | L'amoreaux Park | Nova Scotia Vs CDN Tamils |
| July 28 | Friday 7:00pm | L'amoreaux Parks | Satebalini Vs CDN Tamils |
| August 12 | Saturday 2:00pm | Soccer Centre | CDN Tamils Vs Real Toronto |
| August 18 | Friday 9:00pm | Highview | Brampton Vs CDN Tamils |
| August 27 | Sunday 6:00pm | Soccer Centre | CDN Tamils Vs N.K Pythons |
| Sep. 09 | Saturday 7:30pm | Century Gardens | CDN Tamils Vs Brampton |
| Sep.17 | Sunday 3:00pm | Rosslord | CDN Tamils Vs Barbados |

**மொன்றியால் மில்லேனியம் Cup-2000**

ரொறன்ரோ நகரைப் போன்று மொன்றியால் நகரிலும் எமது தமிழ் மக்களிடேயே உதைபந்தாட்டம் பிரசித்தி பெற்று விளங்குகின்றது. மொன்றியால் Victoria விளையாட்டுக் கழகம் 13வது வருடமாக மிகவும் விமரிசையாக முதலாவது மில்லேனியம Cup 2000 சுற்றுப் போட்டிகளை நடாத்தினர். இதில் ரொறன்ரோவில் இருந்து 6 கழகங்கள் பங்கு பற்றின ஒட்டாவாவில் இருந்து 1 கழகமுமாக மொத்தம் 20 கழகங்கள பங்குபற்றின. மைதானம் முழுவதும் ஆண்களும் பெண்களும், சிறுவர்களுமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். ஒவ்வொரு வருடமும் Victoria விளையாட்டுக் கழகத்தினை மிகவும் திறம்பட இப்போட்டிகள் நடாத்தப்படுகின்றன என்பதற்கு சாட்சியாக கூடியிருந்த ரசிகர்கள் பெருவெள்ளம் இதற்கு சான்றாகும். Victoria விளையாட்டுக்கழகம் கடந்த 12 வருடங்களாக விளையாடிய கழகங்களில் இருந்தும் திறமையான வீரர்களை ஒவ்வொரு கழகத்தில் இருந்தும் தெரிந்தெடுத்து கௌரவித்தமை மிகவும் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். அத்துடன் கலந்து கொண்ட அனைத்து கழகங்களும் மதிய போசனமும் வழங்கினர்.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் இறுதியாட்டத்திற்கு முன்பு கடைசியாட்டமாக




இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் இறுதியாட்டத்திற்கு முன்பு கடைசியாட்டமா ரொரன்ரோ Vs மொன்றியால் அணிகள் மோதின. ரொறன்ரோவில் இருந்து பங்கு பற்றி கழகங்களில் இருந்து வீரர்களை தெரிவுசெல்லப்பட்ட அணியும் மொன்றியால் கழகங்களி இருந்து தெரிவு செய்யப்பட்ட வீரர்கள் அடங்கிய அணியும் மோதின. இதில் மொன்றியலி முதலாவது மில்லேனியம் Cup-2000 களை ரொறன்ரோ அணி 3-1 என்ற கோ அடிப்படையில் மொன்றியால் அணியை தோற்கடித்து மில்லேனியம் Cupை கைப்பற்றியது. ரொறன்ரோ அணியின் தலைவராக Toronto Blues அணியின் விளையாட் வீரர் தாமு முரளீதரன் அவர்களும், Toronto Sunrise கழக வீரர் ஆன புஷ்பா மாஸ் அவர்களும் மிகவும் திறமையாக விளையாடினர் எனபது குறிப்பிடத்தக்கது.

இறுதியாட்டத்தில் Montreal Blues அணியும், மொன்றியால் Canadian Stars அணியு திறம்பட மோதின. ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கா ஆண்களும் பெண்களும் கண்டு களித்தனர். ஆட்டம் வெற்றி தோல்வி இன்றி முடிந்த ஆனால் பனால்டி உதைகள் மூலம் Montreal Blues விளையாட்டுக் கழகம் Canadian விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டு Montreal இன் முதலாவது Victori மில்லேனியம் Cup 2000னை கைப்பற்றியது. இதில் முக்கியமாக Victoria விளையாட் கழகம் எமது நாட்டில் அல்லலுறும் மக்களின் மருத்துவ நிதிக்காக தமிழர் புனர்வாழ்வு கழகத்திடம் தமது பங்களிப்பை வழங்கியது

**Scarborough Rangers விளையாட்டு கழகம்**

கடந்த சில வருடங்களாக Torontoவில் Scarborough Rangers விளையாட்டுக் கழக உதைபந்தாட்ட பயிற்ச்சி வகுப்புகளை நடாத்தி வருகின்றது. சென்ற மாத இறுதியி இக்கழகம் பல சிறுவர்களுக்கு மில்லேனியம் உதைபந்தாட்ட Cup களை வழங் கௌரவித்தது. பலநூற்றுக் கணக்கான பெற்றார்களும் சிறுவர்களும் பங்குபற்றி விழாவாக இது அமைந்தது. இந்நாட்டில் எமது உதைபந்தாட்ட விளையாட்டு வீரர்களி தேவை கருதியும் எதிர் காலத்தை முன்னிட்டும் மிகவும சிறந்த முறையில் பயிற் வகுப்புகளை இலங்கை முன்னைநாள் விளையாட்டு வீரர் திரு. அன்ரன் சந்திரசேகர தலைமையில் இக்கழகம் திறம்பட நடாத்தி வருகின்றது. இது உண்மையிலேயே எம இளம் சமுதாயத்திற்கு செய்யும் ஒரு முக்கியமான வரலாற்றுக் கடமையாகும். 5 சிறுவர்களுடன் தொடங்கிய இப்பயிற்சி வகுப்புகள் தற்போது 150 சிறுவர்களா வளர்ச்சியடைந்துள்ளது. இதன் பெறுபேறுகளை நாம் வரும் காலத்தில் பல நன்மைகளா காணலாம் என்பது தெட்டத்தெளிவாகும். இம்முயற்சியை மேற்கொண்ட திரு. அன்ர அவர்களும் Scar. Rangers விளையாட்டு கழக நிர்வாகிகளும் மிகவும் பாராட்டப் வேண்டியவர்கள்.

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

-தொகுப்பு - சண்

### 1978

1. அந்தமான் காதலி*
2. அச்சாணி
3. அக்னி பிரவேசம்
4. அல்லி தர்பார்
5. அன்னலட்சுமி
6. அன்னபூரணி
7. அதை விரகசியம்*
8. அதிஷ்டக்காரன்
9. அவள் அப்பத் தான்
10. அவள் ஒரு அதிசயம்
11. அவள் ஒரு பச்சைக் குழந்தை
12. அவள் தந்த உறவு
13. ஆனந்த பைரவி
14. ஆயிரம் ஜென்மங்கள்*
15. இளையராணி ராஜலட்சுமி
16. இளமை ஊஞ்சலாடுகிறது*
17. இறைவன் கொடுத்த வரம்
18. இரவு பன்னிரண்டு
19. ...து எப்படி இருக்கு
20. இவள் ஒரு சீதை
21. உள்ளத்தில் குழந்தையடி
22. உனக்கும் வாழ்வு வரும்
23. உறவுகள் என்றும் வாழ்க
24. என் கேள்விக்கு என்ன பதில்*
25. என்னைப் போல் ஒருவன்*
26. ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்
27. ஒரு வீடு ஒரு உலகம்
28. கங்கா யமுனா காவேரி
29. கண்ணாமூச்சி*
30. கண்ணன் ஒரு கைக்குழந்தை
31. கராத்தே கமலா
32. கருணை உள்ளம்
33. கவிராஜ காளமேகம்
34. காமாட்சியின் கருணை
35. காஞ்சி காமாட்சி*
36. காற்றினிலே வரும் கீதம்*
37. கிழக்கே போகும் ரயில்*
38. குங்குமம் கதை சொல்கிறது
39. கை பிடித்தவள்
40. சட்டம் என் கையில்*
41. சதுரங்கம்
42. சக்கைபோடு போடு ராஜா
43. சங்கர் சலீம் சைமன்
44. சிட்டுக்குருவி *
45. சிகப்பு ரோஜாக்கள்*
46. சீர்வரிசை
47. சொன்னது நீதானா
48. டாக்சி டிரைவர்*
49. தங்கரங்கன்*
50. தப்புத் தாளங்கள்
51. தாய் மீது சத்தியம்*
52. திரிபுரசுந்தரி
53. திருக்கல்யாணம்
54. தியாகம்*
55. ...ழல் நிஜமாகிறது
56. பஞ்சாமிர்தம்
57. பருவ மழை*
58. பிரியா*
59. பாவத்தின் சம்பளம்
60. புண்ணிய பூமி
61. பேர் சொல்ல ஒரு பிள்ளை
62. பைரவி
63. பைலட் பிரேம்நாத்*
64. மச்சானை பாத்தீங்களா
65. மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்*
66. மக்கள் குரல்
67. மனிதரில் இத்தனை நிறங்களா*
68. மாங்குடி மைனர்
69. மாரியம்மன் திருவிழா*
70. மீனாட்சி குங்குமம்*
71. முடிசூடா மன்னன்*
72. முள்ளும் மலரும் *
73. மேளதாளங்கள்*
74. ராதைக்கேற்ற கண்ணன்
75. ராஜாவுக்கேற்ற ராணி
76. ருத்ர தாண்டவம்
77. வணக்கத்திற்குரிய காதலியே
78. வண்டிக்காரன் மகன்*
79. வருவான் வடிவேலன்*
80. வட்டத்துக்குள் சதுரம்^
81. வயசு பொண்ணு
82. வாழநினைத்தால் வாழலாம்^
83. வாழ்க்கை அலைகள்
84. வாழ்த்துக்கள்^
85. வெற்றித் திருமகள்^
86. ஜஸ்டிஸ் கோபிநாத்
87. ஜெனரல் சக்கரவர்த்தி

1978ஆம் ஆண்டு மொத்தமாக 87 படங்கள் வெளிவந்தன. சிவாஜியின் தமிழ்ப் படங்கள் 7 வெளிவந்தன. அந்தமான் காதலி, தியாகம், என்னைப் போல் ஒருவன், புண்ணியபூமி, ஜெனரல சக்கரவர்த்தி, பைலட் பிரேம்நாத மற்றும் ஜஸ்டிஸ் கோபிநாத எம்.ஜி.ஆரின் மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் வந்ததும் இந்த ஆண்டு. இந்தப் படத்துடன் எம்.ஜி. ஆரின் படங்கள் மொத்தமாக 136 படங்கள் வெளிவந்திருந்தன. 1978ஆம் ஆண்டுடன சிவாஜிகணேசன் நடித்து வெளிவந்த மொத்த படங்கள் 199 ஆகும். 1979ஆம் ஆண்டில் சிவாஜியின 200வது படம் திரிசூலம வெளிவந்தது.

1978ஆம் ஆண்டு, இந்தக காலத்தில் தமிழகத்தின தனிப்பெரும் பட நிறுவனமான தேவர் பிலிம்சார் தயாரித்த "தாய் மீது சத்தியம்" படத்தில் ரஜினி காந்தி நடித்தது அவரிற்கு ஒரு சிறப்பாக இருந்தது. இந்த வருடம ரஜினிகாந்தின் படங்கள மொத்தமாக 16 படங்கள வெளிவந்தது. குறுகியகாலத்தில் ரஜினிகாந் 26 படங்களை நடித்து முடித்தது ஒரு சாதனையாக இருந்தது.. இதில் பல படங்களில வேறும் பல கதாநாயகர் சேர்ந்து நடித்தது குறிப்பிடத்தக்கது. ரஜினியின் இந்த ஆண்டு படங்களில் மிகவும் குறிப்பிடத்தக்க படங்கள் என்று சொல்லக்கூடியது மகேந்திரனின் முள்ளும் மலரும், K. பாலசந்தரின் தப்புத் தாளங்கள், கமலகாசனுடன் நடித்த இளமை ஊஞ்சலாடுகிறது.

1978ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் திகதி கமலகாசன், வாணி கனபதியின் திருமணம் அன்றைய முதல்வர் மாண்புமிகு எம்.ஜி. ஆரின் முன்னிலையில் சிறப்புற நடைபெற்றது. பாரதிராஜாவின இரண்டு படங்கள் இவ்வருடம வெளிவந்தன. 1. கிழக்கே போகும் ரயில் மற்றும் சிவப்பு ரோஜாக்கள். கிழக்கே போகும் ரயில் படத்தில் 'ராதிகா' அறிமுகமாகிறார். அவருடன் கதாநாயகனாக சுதாகர், பட்டாளத்து விஜயன் என புதிய முகங்கள் வந்தனர்.

கவுண்டமணிக்கு ஒரு விசேட பாத்திரம் கொடுத்து, கவுண்டமணி முன்னுக்கு வர வசதி செய்து செய்து கொடுத்தார். மற்றும் கமலகாசன் நடித்த சிவப்பு ரோஜக்கள் மக்களின் அமோக வரவேற்பைப் பெற்றது. பாரதிராஜாவின் இரண்டு படங்களும் 25 வாரங்களைத ...ண்டி ஓடின. இத்துடன் பாரதி ராஜாவின மூன்று படங்களும் (16 வயதினிலே உட்பட) பாரதிராஜாவை புகழின் உச்சிக்கே கொண்டு வந்த படங்கள் (தொடரும்....)



ஜஸ்டிஸ் கோபிநாத்


KD FINANCIAL SERVICES

Vamadevan Jeyamohan (Jey)
(President)
Royal Bank Approved Third Party Referral Agent

VISA CARDS UPTO $5000

புதியவர்கள் (Fresh Credit) அல்லது நல்ல நிலையில் கிறடிற்றை (Good Credit History) வைத்திருப்பவர்களிற்கும் வேலை செய்யும் கடிதம் (Employment Letter) உடையவர்களிற்கும் விசா காட் எடுத்துத் தரப்படும்

Tel: (416) 431-9315 Fax: (416) 431-2119
Cell: (416) 575-8427 EmailL: Jeys@ica.net
தொடர்புகளுக்கு: weekdays - 5:30pm - 10:00 pm.

Nada Jeyadevan Financial Rep.
Tel: -(416) 398-4760 10:00Am - 8:00pm

Compu Service
COMPUTERS & NETWORK
(416) 399-3235 - (905) 432-2422

COMPUSERVICE International

CONTACT - ALAN SIVA
@ (416) 431-3753
(416) 438-4357
(416) 399-3235

COMPUTER SALES
NEW & USED
NETWORK DESIGN
& INSTALLATION
(905) 432-2422

REPAIRS
UPGRADES
CD BACKUPS
SOFTWARES
*FAX: (416) 431-5828

Email: compuservice@compuserviceint.net
web: www.compuserviceint.net

CHINESE MEDICINE & ACUPUNCTURE CLINIC
PROFESSOR
JAMES X.N.YUAN
GRADUATED IN CAPTAL MEDICAL UNIVERSITY OF CHINA. OVER 20 YEARS EXP. CHAIRMAN OF CANADIAN ASSOCIATION OF TRADITIONAL CHINESE MEDICINE & ACUPUNCTURE

அக்குபஞ்சரினால் தீர்க்க முயற்சிக்கும் சகலவிதமான நோவுகளிற்கும் எம்மால் நிவாரணம் வழங்க முடியும்

EFFECTIVE TREATMENT:
விறைப்பு, விளையாட்டு வாகன விபத்துகளால் வரும் நோவு
STRESS / மனச்சோர்வு, கவலை, நோவு
உற்சாகமின்மை, அஜீரணம், HYPERTENSION..

MON, WED, FRI
9:30 - 12:00 AM 2:00 - 6:30 PM
TUES, SAT
9:30 - 12:00 AM 2:00 - 4:00 PM
THUR, SUN
CLOSED

NEW OPENING AT EGLINTON / KENNEDY (416) 493-9450

AT: 3443 FINCH AVE EAST, SUITE 302
SCARBOROUGH, ONT, M1W - 2S1

FOR APPOINTMENT CALL:
(416)-493-9450

EZ DRIVING SCHOOL

நவீன தன்னியக்க வாகனங்களில் சொந்த மொழியில் பயிற்சி விளக்கங்களுடன் அரச அனுமதி பெற்ற பயிற்சியாளரிடம் பயிற்சி பெற தொடர்புகொள்ளுங்கள்

JEYAKUMAR © (416) 283-4100
Cell: 822-6741 (10 வருடகால அனுபவ பயிற்சியாளர்)


பூட்டு? சாவி?
KEERTH LOGSMITH
வீடு-வியாபாரம்-தொழிலகம்

வீட்டு திறப்புகள் தொலைந்து விட்டதா? மாற்ற வேண்டுமா? மற்றும் உங்களது சகலவித திறப்பு சம்பந்தமான பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில் வைத்திருக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்

(416) 439-3709
Pager: 375-7330

# 21ஆம் நூற்றாண்டில் கணணி இல்லாமல் மனிதன் வாழமுடியுமா?

-ராஜா சொக்கலிங்கம் raja@systemsplus.net
Computer Consultant



## பகுதி 10

## WINDOWS 2000 ME (MILLINIUM EDITION)

Windows 2000 என்பது அதிக பாதுகாப்பான ஒரு Program. Windows 98க்கும் 2000 க்குமிடையில் அதிக வித்தியாசங்கள் உள்ளன. அதிலும் தற்பொழுது Windows 2000 ME என்ற புதிய Version ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளார்கள். இது மிகவும் சிறந்ததும் வசதியானதுமான Program. யாராவது Windows 2000 ஐ வாங்க இருந்தால் அவர்கள் கொஞ்சம் தாமதித்து இந்த Millinum Edition வந்ததும் வாங்குவது நல்லது. இந்த Millinum Edition என்பது, எப்படி Win 95 இலிருந்து அதிலிருந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்து Win 98 உருவானதோ, அதேபோலத்தான் Win98 இல் வசதிக்குறைவான விடயங்களை நிவர்த்தி செய்து முழுவகையில் எந்த பிரச்சினையும் இல்லாமல் பயன்படுத்தக் கூடிய மாதிரித்தான் இந்த Millinum Edition ஐ வெளிவிடப்போகின்றார்கள். இந்த Windows 2000 ME நடைமுறைக்கு வந்ததும் அதில் உள்ள நல்லது கெட்டதுகளைப் பற்றிப் பார்ப்போம். (www.microsoft.com)

## Free E-Mail, Free Internet& Free Homepage

இப்பொழுதுள்ள Computer பாவனையின் அவசியத்தை முன் வைத்துத்தான் இந்த Free E-Mail ஐயும், Free Interent ஐயும் Free Homepageயும் இலவசமாகக் கொடுக்கின்றார்கள். Free -E-Mail கொடுப்பதால் ஒவ்வொருவரும் ஒரு E-Mail எடுத்து வைப்பது நல்லது. அதற்காக உங்களிடம் Computer இருக்க வேண்டுமென்றோ அல்லது Computer துறையில் இருக்க வேண்டுமென்றோ அவசியமில்லை. உதாரணமாக தற்பொழுது உங்களுக்கு என்ன பெயர் எத்தனை வயது என்பது போல என்ன E-Mail address என்று கேட்கின்ற காலம் வெகுதொலைவில் இல்லை. இந்த Free E-Mail ஐ நீண்ட நாட்களாக பாவிக்காமல் விட்டால் அதை அவர்கள் Cancel பண்ணி விடுவார்கள். ஆகவே மாதம் ஒரு முறையாவது ஒரு E-Mail ஐ அனுப்பி Recive பண்ணினால் அந்த E-Mail ஐ தொடர்ந்து வைத்திருக்கலாம். மற்றது E-Mail எடுப்பதில் கொஞ்சம் கெட்டிக்காரத்தனமாக உங்கள் பெயரிலோ அல்லது பெயர் சம்பந்தப்பட்ட எழுத்துக்களை வைத்து எடுக்கலாம். உதாரணமாக Siva என்றால் Siva 123, Siva y2k or Siva Kanthan என்று எடுத்தால் மற்றவர்கள் உங்கள் E-Mail Address ஐ ஞாபகத்தில் வைத்திருக்க இலகுவாக இருக்கும். உங்கள் பெயரே சம்பந்தமில்லாமல் Lots or Stone என்று வைத்தால் மற்றவர்களுக்கு ஞாபகம் இருக்காது. அதே மாதிரி Password ஐ மறக்கிறமாதிரி Select பண்ணாமல் இலகுவானதாக ஞாபகத்தில் வரக்கூடிய மாதிரி உள்ளதாக வைப்பது நல்லது. உதாரணமாக பிறந்த தினத்தையோ Phone Numbe யோ பாவிப்பது நல்லது. Free E-Mailக்கு உதாரணமாக Yahoo Mail, Hotmail ஏதாவது ஒன்றில் எடுத்து வைப்பது நல்லது. Free என்பதால் பல address களை எடுக்காமல் ஒன்றையே வைத்திருப்பது நல்லது. இப்படி பல E-Mail களை எடுப்பதால் தான் அந்த பெயர்கள் எல்லாம் முடிந்து விட்டது. இப்படியாக பல E-Mail களை எடுப்பதால் Password ஐ மறந்து Free என்பதால் இன்னும் பல Address களை எடுப்பதால் பெயர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுகின்றது. அதனால் E-Mail களை பொறுத்தவரை பயனுள்ளதாக ஒழுங்கான ஒரு E-Mail Address பயன்படுத்துவது நல்லது என்பது எனது வேண்டுகோள்.

அதேமாதிரித்தான் Free Homempage ஒன்று உருவாக்குவது நல்லது. நீங்கள் ஒரு advanced User, உங்களுக்கு ஒரு Home Page செய்யத் தெரியும் அல்லது செய்ய ஆர்வம் இருக்கின்றது அல்லது உங்களுக்குத் தேவை அல்லது உங்களது Resume ஐ உங்களது Homepage இல் போட்டு வைக்கவேண்டும். ஒரு இடத்தில் interview க்கு போகும்போது என்னுடைய resume இந்த home-page இல் இருக்கின்றது என்று சொல்லும் போது அதனுடைய மதிப்பு தனித்துவமானது. அதை நீங்கள் விரும்பினால் Internet இல் Free Home Page பல உள்ளன. அதில் போய் பார்த்து நீங்கள் சுலமாக உங்கள் Home Page ஐ உருவாக்கலாம். நீங்கள் பொழுது போக்காக பண்ணாவிட்டாலும் கூட நீங்கள் உங்கள் Family, பிறந்த விடங்கள், கவிதைகள், கட்டுரைகளை வெளியிடும் போது அது உண்மையிலேயே பயனுள்ளதாகவும் உங்களுடைய அறிவை மற்றவர்கள் தெரிந்து கொள்ளவும் கூடியதாக இருக்கும். இந்த Internet Home Page இல் உள்ள சிறப்பு என்னவென்றால் நீங்கள் கனடாவில் இருந்து எழுதினால் கூட அதை உலகத்தில் எங்கிருந்தாவது பார்க்கக்கூடியதாக உள்ளது. உங்களது நண்பர் தமிழீழத்திலேயோ, இந்தியாவிலேயோ இருந்து தொலைபேசியில் அழைத்து சில விபரங்களை உங்களிடம் கேட்டால், நீங்கள் உங்கள் Homepage இன் பெயரைக் கொடுத்து இந்த Homepage இல் என்னுடைய விபரம் எல்லாம் உண்டு என்று ஒரே வார்த்தையில் முடித்து விடலாம். இது Hompage இனுடைய முக்கியமானதும் அதுவும் இலவசமாக கிடைப்பதால் அதை நீங்கள் எடுப்பது என்பது முக்கியம்.

Free internet ஐ பொறுத்தவரை பலர் அதை Free என்பதால் எடுத்து பயன்படுத்துகிறார்கள். ஆனால் அந்த interent காரர்கள் எதெல்லாம் உங்கள் Computer இல் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள் என்பதில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். அதாவது என்ன Program Version உள்ள என்றும், எவ்வளவ Memory இருக்க வேண்டும் என்றும் சொல்வதை ஞாபகமாக வைத்திருக்க வேண்டும். உதாரணமாக அந்த internet Provider உங்களிடம் internet explorer 4 அல்லது அதற்கு மேலும் உள்ள version இருக்கவேண்டும். Memory 16M அல்லது அதற்கு மேல் இருக்கவேண்டும்.

அதாவது அவர்கள் சொல்வதை விட அதற்கு மேல் இருக்கவேண்டும். அதற்கு மேல் இரண்டு மடங்காக இருப்பது எப்பவும் நல்லது. இதெல்லாம் இல்லாமல் free interent ஐ பாவிக்கும் போது அது freeze ஆகி நின்றுவிடும். அதன் பின்பு நீங்கள் மனவருத்தப்பட வேண்டி இருக்கும். அந்த interent provider ஏன் கூடயளவு Memory ஐ வைத்திருக்க சொல்கிறார்கள் என்றால் அவர்கள் விளம்பரங்களையும் சேர்த்து internet இல் போடுகிறார்கள். ஆகையால் Free interent பாவிக்கும் போது அவர்கள் சொல்வதைவிட அதிகமாக போட்டு அதை நீங்கள் சந்தோசமாக பாவிக்கலாம். இன்று உலகம் பூராகப் பார்த்தால் Public Telephone அளவிற்கு Public Computer வரப்போகிறது. உதாரணமாக public Both ஒவ்வொரு street இல் இருப்பது போல public computer ஒவ்வொரு street இலும் இருக்கும். நீங்கள் $20 கொடுத்து 1 மணி நேரம் வாடகைக்கு பாவிக்க கூடிய மாதிரி வரப்போகின்றது.

உங்களுக்கு Computer பாவிக்க தெரியாமல் இருந்தால் எந்த நாட்டுக்குப் போயும் பயன்படுத்த முடியாது. பழைய காலத்தில் சொன்னதுபோல் எழுதப்படிக்கத் தெரிந்தால் மட்டும் போதும் என்ற மாதிரி Computer Basic Knowledge தெரிந்திருப்பது நல்லது. சில அடிப்படை விடயங்களை internet ஐ பயன்படுத்தவும் keyboard, mouse என்பவற்றை use பண்ணவும் தெரிந்திருந்தால் நல்லது.

அடுத்தது internet Shopping. உதாரணமாக sunflowers நிறுவனத்தினர் web page அதில் நீங்கள் அவர்களுடை தளபாட பொருட்களை பார்த்துவிட்டு நீங்கள் அதிலிருந்து Order பண்ணலாம். எங்கள் சமுதாயம் இந்த internet shopping இல் சற்று பின்தங்கி இருக்கிறார்கள் என்று தான் சொல்ல வேண்டும். அதற்கு காரணம் Credit Ca[rd] பாவிப்பதால் அதில் இன்னும் நம்பிக்கை வரவில்லையோ தெரியவில்லை. அதை ஒழுங்காகப் பாவித்தால் அதைவிட இலகுவானது வேறு ஒன்றுமில்லை. இன்னுமொரு 5 ஆண்டுகளில் Road இல் ஓடும் 10 வாகனங்களில் 9 வாகனம் இப்படியான பொருட்களை விநியோகம் செய்யும் வாகனங்களாகத்தான் இருக்கும். ஏனென்றால் எல்லோருமே Pizza விலிருந்து இடியப்பம் வரை interent இல் இருந்து தான் Order பண்ணப் போகிறார்கள்.

www.canada.com
www.yahoo.com
www.hotmail.com
www.download.com
www.homepage.com
www.av.com
www.talkcity.com
www.freeinternet.com
http://microav.com
www.i4free.co.nz

## http://sathyam india net.org.

சத்தியம் page(site) பற்றி சொல்வதானால், பல சிறப்புகள் அவர்களிடம் உண்டு. அதில் அவர்கள் அதை எப்படி Maintain பண்ணுகிறார்கள் என்பது. முதலாவது அவர்கள் ஒரு நாளைக்கு ஒரு தடவையோ இரண்டு தடவையோ update பண்ணுவது மற்றது நீங்கள் e-mail அனுப்பினால் அதற்கு உடன் பதில் அனுப்புகின்றனர். எல்லோரும் அப்படி செய்வதில்லை. தமிழீழம் Video Clips கள் பலவற்றைப் பார்க்கக் கூடியதாக உள்ளது.

BANANA LEAF
Take-out & Catering

Everyday Special
ஆடு, மாடு, புரியாணி
Free வட்டிலப்பம்
$5.50

தினமும் ஸ்பெஷல்

| | | |
|---|---|---|
| செவ்வாய், வெள்ளி | மரக்கறி சாப்பாடு 10 வகை கறியுடன் மத்தராஸ் தாளி (FREE POTATOES PORI) | $4.99 |
| புதன் | புட்டு, முட்டைப்பொரியல், இறால் குழம்பு சம்பல், பருப்பு | $3.99 |
| வியாழன் | 3ரொட்டி, சிக்கன் பாலுண்டி கட்டைச்சம்பல் | $3.99 |
| சனி, ஞாயிறு | மீன் சாப்பாடு, மரக்கறி வகைகளுடன் | $5.50 |
| ஞாயிறு | LampRice | $5.50 |
| திங்கள் | மூடப்பட்டிருக்கும். | |

431 Nugget Avenue, Unit 10, Scarborough, Ont. (Markham & Nugget)
Tel: (416) 609-9247 Pager (416) 600-1030, (416) 704-8208 (24hrs.)

# infoTamils Online

தொழில்நுட்ப வளர்ச்சியின் காலத்திற்கேற்ப
உங்கள் வர்த்தக நிறுவனங்கள் பற்றிய
விபரங்களை *internet* ல் இலவசமாக விளம்பரம்
செய்துகொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

## www.infotamils.com

If you are a business-owner wishing to attract that special Tamil market,
take the opportunity NOW to advertise with infoTamils Online.
Need help moving your company into the exciting and
profitable world of Internet marketing?


**For movies show times visit infoTamils Online**

Contact infoTamils Online Today!
http://www.infotamils.com
Toll free: 1 888-257-2891
e-mail : info@infotamils.com

# SABONA & GIFT

உங்கள் நடமாடும் தொலைபேசிகளுக்கான சேவையை மிக மிகக் குறைந்த விலையில்
**CELL U TECH** இனூடாக செய்து தருகிறோம்.
***ROGERS AT&T, BELL MOBILITY, FIDO, CLEAR NET*** ஆகிய தொலைபேசிகளையும் பெற்றுக் கொள்ளலாம்.
***ERVAMATIN, SABONA*** காப்புக்கள் ஆகியவற்றையும் பெற்றுக்கொள்ளலாம்.

முடி உதிர்வை தடுத்து மீண்டும் வளரச் செய்ய....
**ERVAMATIN**

3238 Eglinton Ave. E
Scarborough இல்
அமைந்திருந்த
எமது அலுவலகம்

2602 B Eglinton Ave. E
Scarborough இற்கு
மாற்றப்பட்டுள்ளது.

எமது தொலைபேசி இலக்கங்கள்
மாறவில்லை

**(416) 264-8787**
**(416) 269-8151**

e.mail: sabona@home.com

# "ராசம்மாவின் ராஜ்யம்"

நகைச்சுவைத் தொடர்... (21)

-கலகலப்பு தீசன்-

சிரித்து சிந்திக்க



கொழும்பில் பத்திரிகை தணிக்கையை எதிர்த்து

வீசப்பட்ட கண்ணீர் புகையை விட கூடிய புகை மண்டலமாக காட்சியளித்தது உலகர் வீட்டு பல்கணி.
குளிரோடு கூடிய வெயிலைக் கண்டதும் கடந்த வருடம் வாங்கிய நிலக்கரியும் இறைச்சி வாட்டும் இரும்புக் கேடரும் பழைய படி பாவனைக்கு வந்து விட்டது.

ஜேர்மனி செல்ல முதல் ராசம்மாக்கா வீட்டில் B.B.Q அமளிதுமளி, ரூபன் எலும்பில்லாமல் அந்த இறைச்சியை வாட்டு என்று ராசாத்தியக்கா சொல்ல, போன கிழமை கட்டின கட்டுப்பல்லு செற கவனமாக இருக்க வேணும் என்று ராசம்மாக்கா ராசாத்தியின் பல்லு கட்டுப்பல்லு என்பதை தணிக்கையில்லா செய்திபோல வெளியில் விட்டா....

உலகர் கலங்கின கண்ணை சால்வையால் துடைத்தார்....
ஏன் உலகண்ணை... புகையுக்குள்ளை இருக்கிறியள் இஞசாலை...
வாங்கோ.... என்று ராசாத்தி கூப்பிட



கண்களைத் துடைத்தபடி உலகர் பல்கணியை விட்டு.... உள்ளே வந்தார் புகையால் கண்கலங்கவில்லை, சில சம்பவத்தை நினைத்து தான் உலகர் கண்கலங்கியது உலகருக்கு மட்டும் தான் தெரியும்
**பாம்பின் காலை பாம்பறியும்,**

ரூபன் ஜேர்மனி அங்கே பதிவுத்திருமணம் செய்து விட்டால் பிள்ளைகளைப் பெற்று பிறந்த நாளிலிருந்து ஒவ்வொரு அங்க அசைவு, வீர தீரத்தில் பெற்றோர் மகிழ்வது... பிள்ளைகளுக்கு தெரியுமா?

பெற்றோரின் ஒவ்வொரு கண்டிப்பும் பிள்ளைகளை.... புடம் போட்டு நல்லவர்களாக்கத் தான் என்பது பிள்ளைகளுக்குத் தெரியாது.

நன்றாக சாப்பிடு... இப்படி உடைகளைப் போடு... படி... அப்பிடி செய், இப்படி செய்.. என கூறினால் அதனை தமது சுதந்திரத்திற்கு பெற்றோர் தடைபோடுவதாக எண்ணி சட்டப்படி பிழை என பெற்றோரை சட்டத்தின்ப் பிடியால் மாட்டி பின் கவலையடைந்த பிள்ளைகள் பலர்.

பிள்ளைகள் வளர்த்து அவர்களின் கல்யாணம் காட்சிகளை பார்க்கும் வரை உயிரோடு இருப்பவர் எத்தனைபேர்.

உயிரோடு இருந்தும் கால வெள்ளத்தால் இடம் பெயர்ந்து உலகின் ஒருபுறம் பெற்றோரும்....
மறுமுனையில் டப்பிங் பெற்றோரை வைத்து மனக்கஸ்டத்துடன் திருமணம் நடாத்திய பிள்ளைகள் எத்தனை றெடிமேட்.




மாமன் மாமி மேல் பற்று வருமா... பாசம்.... வருமா ஒறிஜினல் பெற்றோர்...மாமன் மாமியாக இருந்தும் பற்றும் பாசமும் புதுக்கு கார், எடுப்பதுபோலத் தான் பெறவேண்டியுள்ளது.

ரூபன் காதலித்தான் சரி
கலியாணம் செய்யப் போகிறான் சரி
ஜேர்மனிக்கு போகிறான் சரி
ஒரு வேளை, திருமணம் ஜேர்மனியில் நடந்து வீடியோவை மட்டும் கொண்டு வந்து காட்டினால்?.... உலகரால் நினைத்துப் பார்க்கவே தாய், பிள்ளை, சகோதரர்கள் வாக்குவாதம் அடிபிடி, கருத்து வேற்றுமை வழமை. ஆனால் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அவை விசுவரூபமெடுத்து ஆடத் தொடங்குகின்றன.

இராமாயணம், பாரதம் திருக்குறள், சிலப்பதிகாரம் எத்தனை முறை படித்தாலும் அனுபவ அடி விழும்வரை பலருக்கு அதன் பொருள் விளங்குவதில்லை.

நல்லா வாட்டு ரூபன் இந்த இறைச்சி வேகேல்லை... எண்டு ராசாத்தியக்கா கூற தன்னை.... மறந்து உலகர் ஏன் உவ்வளவு வாட்டு வாட்டியிருக்கிறான் காணாதே.... எண்டார் உலகர் வட்... என்று ரூபி கேட்க இல்லைப்பிள்ளை. உங்கட அங்கிள் இறைச்சி வாட்டிறை சொன்னவர் என்று சொல்ல ராசம்மாக்கா கடைக்கண்ணார் உலகரைப் பார்க்க... உலகர் எழுந்து. ... பல்கணியை நோக்கி நடந்தார் அங்கு ரூபி, ரூபனுடன் கடுகடுப்பாக பேசியது உலகரின் காதில் தெளிவாக விழுந்தது.

ஜேர்மனியில் வேலை செய்யலாம் தானே மை டடி வில் ஹெல்ப் யூ... சம்மர் ஹொலிடேக்கு கனடா வந்து போகலாம் தானே... இங்கை இருந்தும் நீங்கள் இங்கிலீஸ் வடிவா பேச மாட்டியள் அங்கை வந்து ஜேர்மன் பேசாமல் இருப்பதும் ஒண்டுதான் என கூறிய போது உலகருக்கு *ஆனையிறவு கைப்பற்றப்பட்ட செய்தி கேட்டது போல் இருந்தது.*




பிள்ளை சொல்லுறது சரிதானே வந்து
8 வருசத்திலை முன்னேறத் தெரியேல்லை,
இஞ்சையிருந்தாலும் Factory வேலை அங்கையும் அதுதானே.
உலகர் கதைக்க இது நல்ல சந்தர்ப்பம்.
மகனே .. நல்லாய் மாட்டுப்பட்டாய் கலியாணம் முடிந்தபின் சண்டை சச்சரவு படும் குடும்பங்கள் பல கண்டனான். ஆனால் கலியாணம் கட்டாமலே வாய்குள்ளை சுவிங்கம் வைக்கிற கட்டம்

மாதா பிதா குரு தெய்வம் எண்டு நான் சொல்ல
ஓ... பழமொழியும் பனங்காயும் எண்டு என்னை வெருட்டின உனக்கு இப்போ எப்படி இருக்கு என்றுகாதுக்குள் ரகசியமாகச் சொல்ல
**நான் ஜேர்மனிக்கு வரேல்லை..** என ரூபன் கத்த
டேய்! பலகாரம் சுட்டுப்போட்டன் குழப்பாதை எண்டபடி வந்தா ராசம்மாக்கா .....

*(தொடரும்)*

# மரண அறிவித்தல்

தோற்றம்: 12 - 10 - 1945



மறைவு: 29 - 05 - 2000

## இரத்தினம் பாலசுப்பிரமணியம்

தமிழீழம் கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகக் கொண்ட இரத்தினம பாலசுப்பிரமணியம் அவர்கள் 29-05- 2000 செவ்வாய்க்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

